# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No. 91 of 2023

பெயர் : விக்னேஷ்
தந்தை பெயர் : விஸ்வநாதன்
வா.த.சா : 1

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 03.07.2025 அன்று **திரு. M. ராஜகுமரேசன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வா.த.சா. 1 - மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

A-அட்டவணை சொத்தில் 1ம் அயிட்டம் சொத்து எனது தாயாருக்கு பாத்தியப்பட்டதாகும். 2004-ம் ஆண்டு எனது தாயார் கிரயமாக பெற்றப்பின் அதில் பாதி சொத்தை எனக்கு தான செட்டில்மெண்டு எழுதிவைத்தார். A-அட்டவணை சொத்தானது கடலூர்-பாண்டி பிரதான சாலைக்கு கிழக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். மேற்கு பக்கம் பலராமன் மற்றும் லோகு செட்டியார் நிலம் உள்ளது என்றால் சரிதான்.

**2. என் பெயருக்கு எனது தாயார் எழுதி வைத்த செட்டில்மெண்டு ஆவணத்தின்படி பாத்தியப்பட்ட சொத்திற்கு வடக்கு பக்கம் எனது தாயார் பெயரில் உள்ள மீத நிலமும், அதற்கு வடக்கு பக்கம் சாலையும் உள்ளது. கிழக்கு - மேற்காக தார்சாலை உள்ளது என்றால் தார் சாலையை ஒட்டி எனது தாயார் வசம் உள்ள நிலம் உள்ளது. அதன்பிறகுதான் அவர் எனக்கு தான செட்டில்மெண்டு எழுதிவைத்த நிலம் உள்ளது.**

3. 1ம் வாதி எனது தாயார். 2ம் அயிட்டம் A-அட்டவணை சொத்து எனது பெயரில் உள்ள சொத்தாகும். அது எனது தாயார் எனக்கு தான செட்டில்மெண்டு மூலம் கொடுத்த சொத்தாகும். வழக்கு B-அட்டவணை சொத்து சாலை என்றால் சரிதான். A-அட்டவணை சொத்திற்கு மேற்கு பக்கம் நிலம் உள்ளது. அது 1990-ம் ஆண்டுகளிலேயே கையகப்படுத்தப்பட்டது. அதற்கு அடுத்தாற்போல் கடலூர்-பாண்டி தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ளது.

4. B-அட்டவணை சொத்தில் நெடுஞ்சாலைத்துறையினரால் சாலை அமைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. கையகப்படுத்தப்பட்டு மட்டுமே உள்ளது. எனது பிரமான வாக்கு மூலத்தில் சாலை அமைத்துவிட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது சாலை விரிவாக்கம் பணி ஏதும் நடைபெறவில்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள ஷெட் பின்புறம்தான் எனது வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். (மேற்படி புகைப்படம் பி.வா.த.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) மேற்படி புகைப்படத்தில் இருக்கும் டெம்போ வாகனத்தின் கிழக்கு பக்கம் கிழக்கு மேற்காக சாலை சிமெண்டு சாலை செல்ககிறது என்றால் சரிதான் அது வழக்கு சொத்தின் வடக்கு பக்கமாக செல்கிறது.

5. மேற்படி புகைப்படத்தில் உள்ள ஷெட் பேருந்து நிறுத்ததத்திற்காக போடப்பட்டுள்ளது. தற்போது அந்த ஷெட் இல்லை. சாலை விரிவாக்கப் பணிக்காக எடுத்துவிட்டார்கள். தற்போது சாலை விரிவாக்கம் பணி முடிந்துவிட்டது. சாலைப்பணிகள் முடிந்து சாலைகள் மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் உரையில் மேற்படி பயணிகள் நிழற்குடை மீண்டும் அமைக்கப்படலாம் என்று சொல்லப்பட்டுள்ளத என்றால் சரிதான். கடலூர் மாநகராட்சியை இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. A-அட்டவணை சொத்திற்கு B- அட்டவனை சொத்தை வழியாக நாங்கள் எப்போதும் பயன்படுத்தியதில்லை என்றால் சரியல்ல.